# அது தாமதித்தாலும், அதற்கு காத்திரு, அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை ஆபகூக் 2 : 3

**காத்திரு – நிச்சயமாய் வரும்**

சகோதரனே, சகோதரியே, தரிசனம் பெற்றவரே, **காத்திரும், நிச்சயமாய் வரும்.**

**நீதிமொழிகள் 13 : 12 கூறுகிறது :** நெடுங்காலமாய் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதே, ஜீவவிருட்சம் போல் இருக்கும் – என்பதாக.

**நீதிமொழிகள் 23 : 18 கூறுகிறது :** நிச்சயமாகவே முடிவு உண்டு, உன் நம்பிக்கை வீண்போகாது – என்பதாக.

ஆம், நெடுங்காலமாய் காத்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரியே, சகோதரனே,

இருதயம் இளைத்துப்போனாயோ ? உன்னைத் தேற்றுவதற் காகவே, தேவனுடைய வார்த்தை கடந்து வருகிறது. நிச்சயமாகவே முடிவு உண்டு, உன் நம்பிக்கை வீண்போகாது. **நீதி. 23: 18**

இளைப்பாறுதல் தரும் தேவனிடம் வாருங்கள். எங்கே காத்திருப்பது ?

**பக்தன் பாடுகிறான். . .**

இளைப்பாறுதல் தரும் தேவா, களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம் சுகமாய் அங்கு தங்கிடுவேன்
திருப்பாதம் நம்பி வந்தேன் – கிருபை நிறை இயேசுவே
தமதன்மை கண்டடைந்தேன் – தேவ சமூகத்திலே – என்பதாக.

இனி அடிக்கடி மேற்கண்ட வரிகளைப் பாடுங்கள்.

அன்பு சகோதரனே, சகோதரியே,

தேவ சமூகம் தான் உனக்கு கிடைத்த பாக்கியம். தேவ சமூகத்தில் காத்திரு. அன்னாள் தேவ சமூகத்தில் தன் இருதயத்தை ஊற்றிவிட்டாள். அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை

**சங்கீதம் 16 : 11 கூறுகிறது :**

உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு – என்பதாக.

**காத்திரு என்று வேதம் சொல்லுகிறதே ! – "எதற்காக காத்திருப்பது" ?**

**1. யூதா 21 :** தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள்.

**2. 2 பேதுரு 3 : 12 கூறுகிறது,** தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடு காத்திருங்கள்.

ஆம், கர்த்தருடைய பிள்ளையே,

கர்த்தருடைய இரக்கத்தைப் பெறவும், அவருடைய வருகைக்காகவும் ஆவலோடே காத்திருங்கள்.

**தேவனுடைய வருகைக்காக ஆவலோடே காத்திருப்பது என்றால் என்ன ?**

**மத்தேயு 24 : 3ல் சீஷர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்வியானது ?**

உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கம் அடையாளம் என்ன ? எங்களுக்கு சொல்ல வேண்டும். – என்பதாக.

**மத்தேயு 24 : 14 ல் இயேசு சீஷர்களிடம் கூறினதாவது, :** ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசிங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும் .

ஆம் ! கர்த்தருடைய பிள்ளையே,

சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் . . . பிரசிங்கிக்கப்பட, நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுமையும் ஒப்புக் கொடுப்பதாகும். சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் அறிவிக்கப்படும் வரை இயேசுவின் வருகை தாமதமாகிக் கொண்டே இருக்கும். அப்படியானால், தேவனுடைய வருகைக்காக ஆவலோடே காத்திருக்கிறேன் என்று கூறியும், சுவிசேஷப் பணியைக் குறித்து, அக்கரை இல்லாமல் இருந்தால் . . .

**மாற்கு 16 : 15 ல் இயேசு கூறினார்,**

நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் – என்பதாக ! ஆமென்.

அன்பு சகோதரனே, சகோதரியே,

**மாற்கு 15 : 43–ன் படி** தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு – போல நாமும், காத்திருப்போம்.

**ஆபகூக் 2 : 3 கூறுகிறது ,** நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை. குறித்து காலத்துக்கு இன்னும் தரிசனம் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவிலே அது விளங்கும். அது பொய் சொல்லாது.

**அது தாமதித்தாலும், அதற்கு காத்திரு. அது நிச்சயமாய் வரும். அது தாமதிப்பதில்லை. –** ஆமென்.